**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் - I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிப்பதற்குரிய தாள் வழங்கப்படும்.

## பகுதி I

1) நாகரிகம் - பண்பாடு குறித்து பேசக் கூடிய காலமாகக் கொள்ளக்கூடிய ஆண்டு.
   1. கி.மு 8000  2. கி.மு 2000  3. கி.மு 1800
   4. கி.மு 1400  5. கிமு 1000

2) 'நாகரிகங்களின் தொட்டில்' என வர்ணிக்கப்படுவது.
   1. எகிப்து  2. பபிலோனியா  3. உரோம்
   4. கிரேக்கம்  5. யூதம்

3) 'ஆட்சி புரிவதற்கான அதிகாரம் கடவுளிடமிருந்து வருகின்றது' எனும் கருத்தினைக் கொண்டிருந்தவர்கள்.
   1. உரோமையர்கள்  2. பாலஸ்தீனர்கள்  3. மொசப்பத்தேமியர்கள்
   4. கிரேக்கர்கள்  5. பாரசீகர்கள்

4) பெலிஸ்திய சமவெளிக்கும் யூதேயா மலைப்பகுதிக்கும் இடையில் காணப்படுவது,
   1. ஆக்கோ சமவெளி  2. செப்பேலா சமவெளி  3. சாரோன் சமவெளி
   4. எஸ்திரலோன் சமவெளி  5. எர்மோன் மலை

5) பின்வருவோரில் நீதித்தலைவர் அல்லாதவர்.
   1. ஒத்னியேல்  2. அபிமெலக்  3. கிதியோன்
   4. இப்தா  5. எலியா

6) இஸ்ராயேலரிடையே அரசர்கள் உருவாகக் காரணம் குறித்த தவறான கூற்று.
   1. அருகில் உள்ள நாடுகளில் அரசாட்சி காணப்பட்டமை.
   2. இஸ்ரயேலர் ஒரு தனித்துவமான பண்பாட்டுக் கலாசாரங்களையுடைய மக்கள் என்பதை அடையாளப்படுத்தல்.
   3. சீனாய் உடன்படிக்கையின் நியதி.
   4. பகைவர்களை வெல்ல அரசனும் படைகளும் அவசியம் என்ற எண்ணம்.
   5. நீதிபதிகள் ஒழுங்காகச் செயற்படவில்லை.

7) குரு எஸ்ரா குறித்த கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க. அவற்றுள் சரியான கூற்றுக்களைக் குறிப்பிடுக.
   A. ஆண்டவரின் திருச்சட்டத்தை கற்றறிவதிலும் அதன்படி நடப்பதிலும் ஆர்வம் கொண்டவர்.
   B. யூத மக்களை ஒன்று கூட்டி சட்டங்களை எடுத்துரைத்து, கடைப்பிடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்.
   C. பாரசீக மன்னரால் யூத நாட்டிற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
   D. உடன்படிக்கைக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்தார்.
   E. கி.மு 444 இல் எருசலேம் நகர மதிலை கட்டியெழுப்பினார்.
   1. A, B, D  2. A, B, C  3. C, D, E  4. B, C, E  5. A, C, D

agaram.lk

8) பலஸ்தீன யூதர்கள் குறித்த கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொண்டு அவற்றுள் சரியான கூற்றுக்களை குறிப்பிடுக.

A. இவர்கள் எபிரேய மொழி பேசும் யூதர்கள்.
B. பல தெய்வ வழிபாடுகள் சிலை வழிபாடுகளை ஆதரித்தனர்.
C. இறைவனுக்கும் மோசேயின் சட்டங்களுக்கும் விசுவாசமாக வாழ்ந்தனர்.
D. அந்நிய நாடுகளுடனோ அந்நிய நாட்டு மக்களுடனோ எவ்வித தொடர்பும் உறவும் அற்றவர்கள்.
E. எருசலேம் பொதுச் சங்கத்தில் புறவினக்கிறிஸ்தவர்களுக்கு சார்பாக வாதாடினர்.

1. A, B, D 2. B, C, D 3. C, D, E 4. A, C, D 5. B, D, E

9) இறைவனின் தனித்துவமான பண்புகளைக் குறிக்கும் ஏல், ஏலியோன் என்பதன் பொருள்.

1. படைத்தவரான கடவுள் 2. எல்லாம் வல்ல இறைவன்
3. உன்னதரான இறைவன் 4. உடன்படிக்கையின் இறைவன்
5. முதலும் முடிவுமற்ற இறைவன்

10) கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பின் பின்னர் கிறிஸ்தவர்களால் மனுக்குலம் விடுதலை பெற்று புத்துயிர் பெற்ற நாளாக கொண்டாடப்படுகின்றது.

1. பெந்தகொஸ்தே திருவிழா 2. பாஸ்காத் திருவிழா 3. கூடாரத் திருவிழா
4. பாவப்பரிகாரத் திருவிழா 5. யாவேயின் விழா

11) ‘இறுதி நாளில் எல்லோர் மேலும் ஆவியைப் பொழிவேன்’. இவ் வார்த்தையுடன் தொடர்புடைய இறைவாக்கினர்.

1. எசாயா 2. மீக்கா 3. யோவேல் 4. மலாக்கியா 5. திருமுழுக்கு யோவான்

12) திருத்தொண்டர் குழுவில் பொருத்தமற்றவராகக் கருதப்படுபவர்.

1. ஸ்தேவான் 2. பிலிப்பு 3. பிரக்கோர் 4. அந்திரேயா 5. தீமோன்

13) பெந்தக்கோஸ்து நாளில் உலகின் பலபாகங்களிலிருந்தும் ஜெருசலேமிக்கு வந்த மக்கள் தமது மொழிகளில் நற்செய்தியை விளங்கிக் கொண்டார் என்பதிலிருந்து உறுதிப்படுத்தப்படுவது,

1. திருத்தூதர்கள் பல மொழிகளை அறிந்திருந்தனர்.
2. திருத் தூதர்களுக்கு இறைவாக்கு உரைக்கு வல்லமை உண்டு.
3. தூய ஆவி அங்கிருந்த அனைவர் மேலும் இறங்கினர்.
4. திருத்தூதர்களின் தைரியம் உறுதிப்படுத்தப்படுகிறது.
5. யூத மக்களின் அறியாமையை உறுதிப்படுத்துகிறது.

14) புற இனத்தவரின் இறைவாக்கினர் என குறிப்பிடப்படுபவர்கள்

1. எசேக்கியேல், எசாயா 2. எசாயா, எரேமியா 3. தானியேல், எசேக்கியேல்
4. ஆமோஸ், ஒசேயா 5. மீக்கா, எலியா

15) தூய பவுலின் இரண்டாம் மறை தூதுப் பயணத்தின் நோக்கம்,

1. கிறிஸ்தவ நம்பிக்கையை அறியாத மக்களுக்கு அதனை நற்செய்தியாக அறிவித்தல்.
2. இறுதியாக கிறிஸ்தவ சமூகங்களை சந்தித்து கிறிஸ்தவர்களை ஊக்குவித்து உறுதிப்படுத்தல்.
3. எருசலேம் சங்க தீர்மானங்களை அறிவித்து, கிறிஸ்தவர்களை ஊக்குவித்து உறுதிப்படுத்தல்.
4. தூய பவுலி மனமாற்றத்தை உலகறியச் செய்தல்.
5. திருத்தூதர்களின் சாட்சிய வாழ்வை பகிரங்கப்படுத்தல்.

16) “நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கின்றார் கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார் என்று சொல்லிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்” இக் கூற்றுடன் தொடர்புடையவர்கள்.

1. இயேசு நயீன் மகனை உயிர்தெழச் செய்ததைக் கண்ட மக்களால்.
2. யூதர்களால் புறவினத்தார் என கருதப்பட்ட சமாரியரால்.
3. நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளரால்

zigaram.lk

4. பத்து தொழு நோயாளரால்
5. இயேசு தீய ஆவியை விரட்டியதால் குணமடைந்த மனிதனால்.

பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.

A. ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்தே அரசனுக்கு கிடைத்திருப்பதாக நம்பினர்.

B. பைப்பிரஸ் என்ற புல் எழுதப் பயன்படுத்தப்பட்டது.

C. மரணத்தின் பின்பு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை காணப்பட்டது.

D. இவர்களே முதன் முதலில் நாணயங்களைப் பயன்படுத்தினார்கள்.

E. பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களைப் புரிந்து முடிவுகளை எடுத்தல்.

17) எகிப்திய நாகரிகம் பற்றிய சரியான கூற்றுக்கள்.

1. A, B, C  2. A,B,D  3. A, C,D  4. A, D, E  5. C, D,E

18) இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கொண்டு வந்த யோசேப்பின் எலும்புகளை புதைக்கப்பட்ட இடம்.

1. எபிரோன்  2. பெத்தானியா  3. செக்கேம்
4. பெத்சாய்தா  5. கானா

19) பின்வருவனவற்றுள் 'விடுதலைப் பயணம்' பற்றிய தவறான கூற்று.

1. இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தனர்.
2. இஸ்ரயேலரின் விடுதலைப் போராட்டத்திற்கு மோசே தலைமைத்துவம் வகித்தார்.
3. விடுதலைப் பயணக் காலத்தில் பார்வோன் யோசேப்புப் பற்றி எதுவும் அறியாதிருந்தார்.
4. இஸ்ரயேலர் கலிலேயாக் கடலைக் கடந்து பாலைவனத்தை அடைந்தனர்.
5. இஸ்ரயேலர் பாஸ்கா உணவை உண்டபின் எகிப்திலிருந்து புறப்பட்டனர்.

20) பாலஸ்தீன அரசு வட அரசு, தென்னரசு எனப் பிளவுற்றது.

1. கி.மு 822  2. கி.மு 922  3. கி.மு 720  4. கி.மு 722  5. கி.மு 950

21) யூத சமுதாயத்தில் பாவிகளாக கருதப்பட்டவர்கள்.

1. பெண்களும், நோயாளர்களும்  2. சமாரியர், புறவினத்தார்
3. ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்  4. தீவிரவாதிகள், எசீனியர்
5. ஆயக்காரரும், விபச்சாரிகளும்

agaram.lk

22) திருத்தூதர் தோமாவின் விசுவாச அறிக்கையுடன் தொடர்புடைய சரியான கூற்று.

A. 'நீர் கடவுளின் மெசியர்'.

B. 'ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்'.

C. 'நீ என்னைக் கண்டதனால் நம்பினாய் காணமலே நம்புவோர் பேறு பெற்றோர்'.

D. 'என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே.'

E. 'நீரே என் ஆண்டவர் ! நீரே என் கடவுள்'

1. ABC  2. BCD  3. CDE  4. BCE  5. ADE

23) இறந்த பின் உயிர்ப்பு, தீர்ப்பு, மெசியாவின் வருகை ஆன்மாவின் அழியாமை வானதூதர் முதலிய கோட்பாடுகளை ஏற்க மறுத்தவர்கள்,

1. பரிசேயர்  2. மறைநூல் அறிஞர்கள்  3. சதுசேயர்கள்
4. யூத தலைமைச் சங்கம்  5. எசீனியர்

24) கி.பி 26 – 36 வரை இயேசுவின் பாடுகளுடன் தொடர்புடைய ஆளுநராக இருந்தவர்.

1. கால்சின் ஏரோது  2. அக்கரிப்பா  3. பெலிக்ஸ்
4. பெஸ்து  5. போந்தியு பிலாத்து

25) கீழ்த் தரப்பட்டுள்ளவற்றில் கிறிஸ்தவ குடும்ப வாழ்வு குறித்து புனித பவுல் பேசியுள்ள இரண்டு மடல்கள்

A. உரோமைய திருமடல்

B. கொரிந்திய திருமடல்

C. எபேசிய திருமடல்
D. பிலிப்பிய திருமடல்
E. தெசலோனிக்க திருமடல்

1. A, B 2. B, C 3. C, D 4. D, E 5. A, E

26) உரோமையர் பலஸ்தீனாவைக் கைப்பற்றியது,
1. கி.மு 62 இல் 2. கி.மு 65 இல் 3. கி.மு 63 இல்
4. கி.மு 68 இல் 5. கி.மு 70 இல்

27) 'இறையியல் இலத்தீன் மொழியின் தந்தை' என அழைக்கப்படுபவர்.
1. அலெக்ஸ் சாந்திரிய கிளமென்ட் 2. ஒரிஜன் 3. தூய ஜஸ்ரின்
4. இரனேயுஸ் 4. தேர்த்தூலியன்

28) தூய ஜஸ்ரின் எழுதிய நூல்கள் என குறிப்பிடப்படுது,
1. ஆன்மீக வாழ்வின் இரகசியம் 2. கிறிஸ்து வேத ஆதாரம்
3. அப்பலோஜியா 4. பேதக மறுப்பு
5. பிரமாணங்கள்

29) நெஸ்தோரிய வாதத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுக்கள்.
A. வார்த்தை கடவுளிலும் கீழானவர்.
B. இயேசு கடவுள், மனிதன் என இரண்டு ஆட்களாக இருக்கிறார்.
C. தூய ஆவி கடவுள் அல்ல.
D. மனித இயேசு கடவுள் அல்ல.
E. மனித இயேசுவைப் பெற்றெடுத்த தாய் தேவதாய் என கூறமுடியாது.

1. A,D,E 2. A,C,D 3. B,C,D 4. B,D,E 5. C,D,E

30) ...................... முதல் துறவி இறையியலாளராக விளங்கினார். இடைவெளிக்குப் பொருத்தமானது.
1. கஸியன் 2. பக்கோமியுஸ் 3. பசில் 4. கிலேரியன் 5. யோவான்

agaram.lk

31) ஜேர்மனியின் பெண் திருத்தூதர் என்று அழைக்கப்பட்டவர்.
1. லியோபா 2. புனித அவிலா திரேசா 3. மரியா லொறென்சோ
4. புனித ஆன்ஸ்கா 5. புனித பிறிஜற்

32) தோமாஸ் முன்ற்சர் பற்றிய பொருத்தமற்ற கூற்றை இனங்காண்க.
1. பிரான்ஸ் நாட்டில் நோயன் பட்டணத்தில் 1509 இல் பிறந்தார்.
2. குழந்தைகளின் திருமுழுக்கை ஏற்றுக் கொள்ளவில்லை.
3. 'ஜேர்மன் வழிபாடு' எனும் நூலை வெளியிட்டவர்.
4. அருட்சாதனங்கள் எல்லாம் வெறும் அடையாளங்களே என்றார்.
5. பெண்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தார்.

33) பப்ரிஸ்ற் சபையின் இணைத் தாபகர்.
1. ஜோன் வெஸ்லி 2. லூத்தர் 3. கல்வின்
4. வில்லியம் கேரி 5. சுவிங்ளி

34) திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்ட ஆண்டாகக் கொள்ளக்கூடியது.
1. கி.பி 1345 – 1363 2. கி.பி 1545 – 1563 3. கி.பி 1645 – 1663
4. கி.பி 1465 – 1470 5. கி.பி 1745 - 1753

35) ஐரோப்பிய நாடுகளிலிருந்து பேரறிஞர்களையும், கல்விமான்களையும் வரவழைத்து கலை அறிவியல் மன்றத்தை ஏற்படுத்தியவர்.
1. கசியோடோறஸ் 2. புனித கன்ரபெரி அகஸ்ரினார் 3. அலகுயின் துறவி
4. எயின்காட்டு 5. பேரரசன் சார்லமென்

36) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதல் பல்கலைக்கழகம் என ஏற்றுக் கொள்ளப்படுவது,
1. பரீஸ் பல்கலைக்கழகம் 2. பொலஞ்ஞா பல்கலைக்கழகம்
3. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 4. சலமன்கா பல்கலைக்கழகம்
5. ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்

37) சமயம், விஞ்ஞானம் ஒன்றிலொன்று நிறைவு பெறுகின்றது எனக் கூறியவர்.
1. கிரஹம்பெல் 2. சார்டேன் 3. பிளமிங்
4. சேர் ஐசாக் நியூட்டன் 5. தோமஸ் எடிசன்

38) அல்பேர்ட் அயின்ஸ்டைன் குறித்த தவறான கருத்து.
1. நவீன பௌதிகவியலின் தந்தை
2. மின்சக்தி, காந்தசக்தி, புவியீர்ப்பு ஒப்பிட்டு எண்பித்தார்.
3. யூத கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார்.
4. சத்திரசிகிச்சை நிபுணர்.
5. நோபல் பரிசு பெற்றார்.

39) அகுஸ்தீனாரின் வாழ்வின் மனமாற்றத்தின் முதற்படியாக அமைந்த நூல்.
1. திருவிவிலியம் 2. ஹொரேன்சியுஸ் 3. தன்னிலை ஏற்பு
4. இருண்ட இரவு 5. சினன் திரோபுல்

40) சமயக் கருத்துக்களுக்கு ஏற்றவாறு இசை அமைக்கப்பட்டு, தியான இசைமுறையாக கருதப்படுவது,
1. ஓரத்தோரியோ இசை 2. பறோக் இசை 3. கலப்பு இசை
4. சேர்ந்திசை முறை 5. பாடற் திருப்பலிகள்

41) “தெய்வீக ஓவியர்” என அழைக்கப்படுபவர்.
1. மைக்கல் ஆஞ்சலோ 2. இறபாயல் சன்சியோ 3. கியோற்றோ
4. பொன்னி 5. லியோனா டோடாவின்சி

42) ஆசியாவிலே கிறிஸ்தவத்தை தம் நாட்டுமதமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடு.
1. இந்தியா 2. இலங்கை 3. கேரளா 4. பலஸ்தீனா 5. ஆர்மேனியா

43) திருத்தந்தையின் வழிகாட்டலை ஏற்று, இலத்தீன் வழிபாட்டு முறைகளை ஏற்க மறுத்தவர்கள்.
1. சீரோ மலங்காரா திருச்சபை 2. இலத்தின் திருச்சபை 3. சீரோ மலபார் திருச்சபை
4. வைதீக திருச்சபை 5. அங்கிலிக்கன்

44) கத்தோலிக்க சமய சுதந்திரத்தை 1806 இல் சட்ட பூர்வமாகப் பிரகடனம் செய்தவர்.
1. ஜேம்ஸ் ஸ்டுவார்ட் 2. பிறெட்றிக் நோத் 3. வாட்சன்
4. தோமஸ் மெயிற்லன்ட் 5. வில்லியம் ஜேம்ஸ்

45) கிறிஸ்தவம் ‘ஒளி வீசும் மதம்’ என அழைக்கப்பட்ட நாடு.
1. சீனா 2. கொரியா 3. பிலிப்பைன்ஸ் 4. இந்தியா 5. ஜப்பான்

46) கி.பி 1891 இல் ‘தொழிலாளர் நிலைமை’ என்ற சுற்று மடலை எழுதிய திருத்தந்தை.
1. திருத்தந்தை 23ம் யோவான் 2. திருத்தந்தை 11ம் பயல்
3. திருத்தந்தை 9ம் பத்திநாதர் 4. திருத்தந்தை 2ம் யோவான் பவுல்
5. திருத்தந்தை 13ம் லியோ

47) இன்றைய உலகில் திருச்சபை என்ற மறைபணிக் கொள்கையின் இரண்டாம் பகுதியில் பேசப்படுகின்ற பிரச்சினைகளில் பொருந்தாத கூற்று.
1. குடும்பம் - திருமணம் 2. மனிதப்பண்பாடு
3. சமூக பொருளாதார அரசியல் வாழ்க்கை 4. மனித மாண்பு
5. உலக அமைதியும் அதற்கு எதிரான போரும்

agaram.lk

48) அமைதி என்பது,

1. போர் நிகழாதிருக்கும் நிலைமை
2. ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்தி.
3. நீதியால் விளைவது
4. சமத்துவத்தை ஏற்படுத்துவது.
5. அடக்கியாளுகின்ற ஆட்சி முறை

49) 'ஏழைகளின் நண்பன்' என்ற சஞ்சிகையை மாணவர்களைக் கொண்டு வெளியிடும் திட்டமொன்றினை மேற்கொண்டவர்.

1. அருட்பணி மேரி பஸ்தியன்
2. ஆயர் லியோ நாணயக்கார
3. அருட்பணி மைக்கல் ரொட்ரிக்கோ
4. ஆயர் பொன்ஜின்
5. ஆயர் இலக்ஷ்மன் விக்கிரமசிங்க

50) உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் (W.C.C) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.

1. 1920  2. 1948  3. 1937  4. 1873  5. 1940

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்

❖ **பகுதி I இல் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1) i. இஸ்ரயேலரின் நீதித்தலைவர்களுக்கு இறைவனால் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான பணிகள் நான்கு தருக.
   ii. சாலமோன் அரசனின் ஆட்சிச் சிறப்புக்கள் நான்கு தருக.
   iii. யூத சமூகப் பிரிவுகளில் தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்பட்ட நான்கு வகையினரைக் குறிப்பிடுக.
   iv. யூத தலைமைக் குருக்களின் பணிகள் நான்கு தருக.
   v. கிறிஸ்தவ நாகரிகத்தில் உரோம நாகரிகம் ஏற்படுத்திய தாக்கங்கள் நான்கு குறிப்பிடுக.

2) i. மிலான் சாசனத்தின் விளைவாக கிறிஸ்தவர்களுக்கு கிட்டிய நன்மைகள் இரண்டும் தீமைகள் இரண்டும் குறிப்பிடுக.
   ii. தூய கொலம்பா பற்றிய நான்கு விடயங்கள் எழுதுக.
   iii. பின் மத்திய காலத்தில் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமய சிந்தனையாளர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.
   iv. மத்திய காலப்பகுதியில் திருச்சபையில் காணப்பட்ட பண்புகள் நான்கினைத் தருக.
   v. சிலுவைப் போர் இயக்கம் வளர்ச்சியடையத் துணை நின்ற காரணிகள் நான்கு குறிப்பிடுக.

3) i. மத்தியுரிச்சி அடிகளாரின் மறைதூதுப் பணியில் காணப்பட்ட சிறப்பான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   ii. போர்த்துக் கேயரின் இலங்கை வருகைக்கான காரணங்கள் நான்கு தருக.
   iii. ஒல்லாந்தர் காலத்தில் இயங்கி வந்த நான்கு விதமான பாடசாலைகளையும் தருக.
   iv. கோதிக் கட்டிடடக் கலையின் சிறப்பம்சங்கள் நான்கு தருக.
   v. போர்த்துக்கேயர் கால சிங்கள, கிறிஸ்தவ இலக்கியங்கள் இரண்டும் தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள் இரண்டும் குறிப்பிடுக.

## பகுதி II

4) i. உரோமையக் கலாபனை ஏற்பட்டமைக்கான காரணங்களை விளக்குக.
   ii. இன்றைய காலகட்டத்தில் இலங்கைத் திருச்சபை எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு கிறிஸ்தவ மாணவனாகிய நீர் அமைதியையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த மேற்கொள்ளத்தக்க நடவடிக்கை பற்றிய உமது கருத்துக்களை விளக்குக.

agaram.lk

5) i. ஐரோப்பாவில் காணப்பட்ட இரண்டு திருவழிபாட்டு இசைமுறைகளைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

ii. கிறிஸ்தவக் கலைகள் மறை அறிவை வழங்குவதில் தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதனை ஆதாரத்துடன் விளக்குக.

6) i. போர்த்துக்கேயர் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான சான்றுகளையும், அகழ்வாராட்சிக் கண்டு பிடிப்புகளையும் விளக்குக.

ii. இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் ஓறத்தோரியரின் சபைக் குருக்களால் ஆற்றப்பட்ட மறைபரப்புப் பணியை விளக்குக.

7) i. ஆசிய ஆயர் மன்றத்தின் சமூக நோக்கம் பற்றி விளக்குக.

ii. இலங்கையிலுள்ள பல்வேறு மதங்களுக்கிடையில் எவ்வாறு புரிந்துணர்வை ஏற்படுத்தலாம் என்பதனை விளக்குக.

8) i. இலங்கையின் சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலத்தில் கல்வித் துறைக்கு அதிக பங்களிப்புச் செய்த கிறிஸ்தவ கல்விமான்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களது வாழ்க்கையின் ஆற்றிய பணிகளை விளக்குக.

ii. சமூக மேம்பாட்டு தொடர்பாக இளைஞர்களால் முன்வைக்கப்பட வேண்டிய முக்கிய கருத்துக்கள் யாவையெனக் குறிப்பிட்டு விளக்குக.

agaram.lk